II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 337 / 2023**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.K.Palanikumar, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 14.10.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Majula | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்டதன் பேரில் 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

2 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு என் தாயாரை போய் பார்த்தேனா என்றால் போனேன் அவர் என்னை பார்க்கவிரும்பவில்லை என்று சொல்லிவிட்டார். ஏன் என்றால் என் திருமணத்தின் போது எனக்கு 80 செண்ட் நிலம் கொடுப்பதாகவும் தன்னையும் தனது கணவரையும் பார்த்துக்கொள்ளுமாறும் சொன்னார்கள். என் கணவர் ஒத்துக்கொண்டால் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னேன். எனது தாயார் மூன்று பேருக்கும் சமமாக சொத்து பிரித்து தருவதாகவும் அவர்களை நான் கடைசி வரை பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் சொன்னார் என்றால் சரிதான். இது சம்மந்தமாக என் தந்தையை பார்த்து பேசுமாறு என் தாயார் சொன்னார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் என் தந்தைக்கு அவரது தந்தை மூலம் பாத்தியப்பட்டது. எனது தாத்தா கடன்களையும் வைத்து சென்றார் என்றால் எனக்கு தெரியாது. என் தந்தையிடம் பேச முயன்ற போது எனது

அழைப்பை கட் செய்து விட்டார்கள். எண்ணையும் பிளாக் செய்து விட்டார்கள். என் தந்தைக்கு என் மேல் இவ்வளவு கோவம் வர என்ன காரணம் என்றால் எனக்குத் தெரியாது. என் தந்தை என்னை ஆளாக்கி திருமணம் செய்து கொடுக்கும் வரை நல்ல தந்தையாக இருந்தார் என்றால் சரிதான். அதற்கு பின்பு என் மீது கோபம் கொள்ள என்ன காரணம் என்றால் என் கணவருக்கு கண்ணில் கட்டி ஏற்பட்டது. அந்த மருத்துவ செலவிற்காக நான் என் தந்தையிடம் எனது பங்கு சொத்தை கேட்டேன். என் கணவருக்கு ஒரு நாளைக்கு அப்பலோ மருத்துவமனையில் ரூ.1 லட்சம் வரை செலவானது. 4 வருடங்கள் மருத்துவம் பார்த்தேன். அதற்காக ரூ.15 லட்சம் என தந்தை ஏற்பாடு செய்தார் என்றால் அவருடைய நண்பர் தாஸிடம் எனது காலி நில ஆவணத்தை வைத்து கடன் வாங்கினேன். அந்த காலி நிலம் சிட்கோ இன்டஸ்டிரியல் எஸ்டேட்டில் எண். 27, 28 உடையது ஆகும். தாஸ் என்னிடம் ரூ.15 லட்சத்தை தொகையாக கொடுத்தார். நானும் கொஞ்சம் கொஞ்சமா 5 வருடத்தில் தொகையாக கொடுத்து முடித்தேன். அந்த தொகையை வாங்கியதற்கும் நான் திருப்பி கொடுத்ததற்கும் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். தாஸ் என்பவரை எனக்கு என் தந்தை மூலமாக தெரியும். ரூ. 15 லட்சத்தை தாஸிடம் கொடுத்ததே எனது தந்தை தான் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த பணத்தை நான் திரும்ப கொடுக்கவில்லை என்றும் அது எனது தந்தையின் பணம் என்பதால் தான் என்னிடம் ஆவணம் எதுவும் எழுதி வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது ஆவணங்களை கொடுத்து தான் நான் பணம் வாங்கினேன். எங்களது சொத்தை வைத்தே எனது கணவருக்கான மருத்துவ செலவை கடன் வாங்கி செய்ய முடியும் என்கிற நிலையில் ஏன் என் தந்தையிடம் பணம் கேட்டேன் என்றால் எங்களது நிறுவனம் அடமானத்தில் இருந்தது. அந்த நிறுவனம் உள்ள

இடமும் அடமானத்தில் இருந்தது. ரூ.15 லட்சம் கடன் பெற்ற போது கொடுத்த ஆவணம் வேறு நிலத்திற்கு உரியது.

(இந்நிலையில் 2, 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)